# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் - 01.09.2026

## முன்னிலை

**முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப. (ஓய்வு)**

**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 9136/SCIC/2024**

திருமதி. R.மெட்டில்டா பிரீதி - மேல்முறையீட்டாளர்
த/பெ.திரு.ராஜ் அம்ப்ரோஸ்
எண்.153, 3-வது நிழற்சாலை
கட்டம்-1, டால்லர்ஸ் காலனி
வெங்கம்பாக்கம், சென்னை-600 127
Phone:87544 65204.

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ - பொது அதிகார அமைப்பு
காவல் துணை ஆணையாளர்
மத்தியக் குற்றப்பிரிவு,
தாம்பரம் மாநகரக் காவல்,சோழிங்கநல்லூர்
சென்னை-600 119.

## ஆணை

| | | |
|---|---|---|
| **1.** | **மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு** | **22.04.2024** |
| 2. | பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 15.05.2024 |
| 3. | மனுதாரரின் முதல் மேல்முறையீட்டு மனு | 23.05.2024 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 10.07.2024 |
| 5. | பின்னர் பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 18.09.2025 |
| 6. | மனுதாரரின் ஆட்சேபனை மனு | 19.09.2025 |

மனுதாரர், தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் 22/04/2024 நாளிட்ட மனுவை பொதுத் தகவல் அலுவலர்/ காவல் துணை ஆணையாளர், மத்தியக் குற்றப்பிரிவு, தாம்பரம் மாநகரக் காவல், (இ) சோழிங்கநல்லூர், சென்னை அவர்களுக்கு அனுப்பி, அதில் "மத்திய குற்றப்பிரிவு அணி -III, காவல் ஆய்வாளர் திரு.D.வெங்கடேசன்

அவர்களின் மனுதாரரின் 21/03/2024 நாளிட்ட புகார் மனுவில் குற்றச்சாட்டிற்கு உள்ளான எதிர் மனுதாரர்களிடம் பெருந்தொகையை இலஞ்சாக பெற்றுக் கொண்டு, எதிர் மனுதாரர்களுக்கு ஆதரவாக மட்டுமே முறைகேடான விசாரணையை மேற்கொண்டதாக மனுதாரர் சுமத்திய குற்றச்சாட்டுகளை நிரூபிக்க, தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு-2(J)-ன்படி காவல் ஆய்வாளர் திரு.D.வெங்கடேசன் அவர்களது பணி, ஆவணங்கள் மற்றும் பதிவுறுக்களை மனுதாரர் மற்றும் மனுதாரருக்கு உதவியாக மனுதாரரின் கணவர் ஆய்வு செய்ய வேண்டிய நாள் மற்றும் நேர விவரங்கள் அடங்கிய தகவல்." என்பன போன்று 2 (இரண்டு) இனங்களில் தகவல்களை அளிக்கக் கோரியுள்ளார்.

2. இன்றைய (01/09/2026) ஆணையத்தின் விசாரணையின் போது மனுதாரர் திருமதி.R.மெட்டில்டா பிரீதி அவர்கள் தனது கணவர் திரு.ராஜ் அம்ப்ரோஸ் என்பவருடன் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பில், திரு.G.ஸ்டாலின், இ.கா.ப., காவல் துணை ஆணையாளர், மத்திய குற்றப்பிரிவு, தாம்பரம் மாநகரக் காவல், (இ) சோழிங்கநல்லூர், சென்னை அவர்கள் ஆஜராகி, மனுதாரருக்கு 15/05/2024 மற்றும் 18/09/2025 தேதிகளிட்ட கடிதங்கள் வாயிலாக பதில்களை அனுப்பியுள்ளதாகத் தெரிவித்தார். மனுதாரர் 19/09/2025 தேதியிட்டு, தனது ஆட்சேபனை மனுவினை அனுப்பியுள்ளார். இன்றைய விசாரணையின் போது, மனுதாரர், தனது 21/03/2024 தேதியிட்ட புகார் மனு தொடர்பாக, பிரிவு 2(J)-ன் கீழ் பதிவேடுகளை / ஆவணங்களை பார்வையிட்டு ஆய்வு செய்ய நாள், நேரம் கோரியிருந்ததாகவும், அத்தகைய வாய்ப்பு தனக்கு வழங்கப்படவில்லை என முறையிட்டார்.

**3. எனவே, மனுதாரர், தனது 21/03/2024 தேதியிட்ட புகார் மனு தொடர்பாக, பிரிவு 2(J)-ன் கீழ் பதிவேடுகளை / ஆவணங்களை பார்வையிட்டு ஆய்வு செய்ய 09/09/2026 அன்று காலை 11.00 மணிக்கு, பொதுத் தகவல் அலுவலரின் அலுவலகத்திற்கு செல்ல வேண்டுமென்றும், பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் 21/03/2024 தேதியிட்ட புகார் மனு தொடர்பான ஆவணங்களை / பதிவேடுகளை தயார் நிலையில் வைத்திருந்து, மனுதாரரை பார்வையிடச் செய்வதோடு, அது தொடர்பான நிறைவேற்றுகை அறிக்கையினை 15/09/2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்கண்ட உத்தரவுகளுடன் இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான வழக்கின் விசாரணை இத்துடன் முற்றாக்கம் செய்யப்படுகிறது.**

**ஒம்./-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 9136/SCIC/2024</u>**

**பெறுநர்**

பொதுத் தகவல் அலுவலர்/
காவல் துணை ஆணையாளர்
மத்தியக் குற்றப்பிரிவு,
தாம்பரம் மாநகரக் காவல்,
சோழிங்கநல்லூர் சென்னை-600 119.

**மேல்முறையீட்டாளர்**

திருமதி. R.மெட்டில்டா பிரீதி
த/பெ.திரு.ராஜ் அம்ப்ரோஸ்
எண்.153, 3-வது நிழற்சாலை
கட்டம்-1, டால்லர்ஸ் காலனி
வெங்கம்பாக்கம், சென்னை-600 127
Phone:87544 65204.

RG/Sr.PC